**செய்தி வெளியீடு எண்: 631** **நாள்: 07.09.2018**

# செய்தி வெளியீடு

## தியேட்டர்களில் விற்கப்படும் பொட்டலமிடப்பட்ட உணவுப் பொருட்கள் MRPக்கு அதிகமாக விற்றால் நடவடிக்கை – தொழிலாளர் துறை அறிவிப்பு

தமிழ்நாட்டில் உள்ள சினிமா தியேட்டர்களில் உள்ள கேன்டீன், உணவகம், ஸ்டால்கள் போன்ற கடைகளில் விற்கப்படும் பொட்டலப் பொருட்கள், உணவுப் பொருள் பாக்கெட்டுகள், குளிர்பானங்கள், தண்ணீர் பாக்கெட்கள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள (MRP) அதிகபட்ச சில்லரை விற்பனை விலையை விட கூடுதலாக விற்கப்பட்டு வருவதாக தொடர்ந்து புகார் வந்த வண்ணம் இருந்ததால் அவ்வாறு தவறு செய்யும் தியேட்டர் கேண்டீன் உரிமையாளர்கள் மீது தக்க சட்டரீதியான நடவடிக்கை எடுக்க சென்னை, தொழிலாளர் ஆணையர் திரு. இரா. நந்தகோபால் இ.ஆ.ப., அவர்களால் தமிழகம் முழுவதிலுள்ள அனைத்து தியேட்டர்களிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தொழிலாளர் உதவி ஆணையர் தலைமையில் தனிப்படை அமைத்து கடந்த 06.09.18 மற்றும் 07.09.18 ஆகிய இரு நாட்களில் ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது.

மேற்கண்ட சிறப்பாய்வின் போது தமிழகத்திலுள்ள **335** தியேட்டர்களில் ஆய்வு செய்யப்பட்டது. இதில் **2011**ம் வருட சட்டமுறை எடையளவு பொட்டலப் பொருள் விதிகளை மீறி பொட்டலப் பொருள்களான தண்ணீர், குளிர்பானம், உணவுப் பாக்கெட்டுகள் ஆகியவற்றில் குறிப்பிட்ட விலைக்கு அதிகமாக விற்ற **72** தியேட்டர் கேன்டீன் உரிமையாளர்கள் மீதும் பொட்டலப் பொருள்கள் அடைக்கப்பட்ட பாக்கட்டுகளின் மீது தயாரிப்பாளர் முழு முகவரி, அதிகபட்ச சில்லறை விற்பனை விலை, பொருள் அடைக்கப்பட்ட நாள், உபயோகிக்க வேண்டிய காலம், போன்ற விபரங்களை அச்சிடப்படாமல் பொட்டலங்களை விற்பனை செய்த **38** தியேட்டர் உரிமையாளர்கள் மீதும் இதர எடையளவுச் சட்ட விதிகள் மீறல் காரணமாக **4** நிறுவனங்கள் மீதும் ஆக மொத்தம் **114** தியேட்டர் கேன்டீன் உரிமையாளர்கள் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதே போல் திரையரங்குகள், பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள், ஹோட்டல்கள், சாலையோர உணவகங்கள், டிபார்ட்மென்ட் ஸ்டோர்ஸ் போன்ற இடங்களில் விற்பனை செய்யப்படும் பொருட்கள் அடைக்கப்பட்ட பாக்கட்டுகளின் மீது குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேல் விற்பனை செய்தல் அல்லது பெட்ரோல் / டீசல் பங்குகளில் அளவு குறைவாக விற்பனை செய்தல் அல்லது நியாயவிலைக் கடைகளில் இதர நிறுவனங்களில் விற்கப்படும் பொருள்களின் அளவினை குறைத்து விற்பனை செய்தல் போன்ற நுகர்வோர் நலனுக்கு எதிராக செயல்படும் நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக புகார் செய்ய தொழிலாளர் துறையினால் அறிமுகப்படுத்தப்பட்டு பயன்பாட்டில் இருந்து வரும் TN-LMCTS (Tamil Nadu Legal Metrology Complaint Tracking System) என்ற கைபேசி செயலியை Google Play store மூலம் பதிவிறக்கம் செய்து அதன் வாயிலாக நுகர்வோர்கள் / பொதுமக்கள் புகார் அளித்து உரிய நிவாரணம் காணலாம் என தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**